(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி, இராதாபுரம் மற்றும் அம்பாசமுத்திரம் வட்டங்களில் காட்டுநாயக்கன் சாதிச்சான்று வழங்குவதில் தவிர்க்கக்கூடிய தாமதங்கள் ஏதும் ஏற்படவில்லை. அனைத்து இனத்தவர்க்கும் சாதிச்சான்றுகள் விரைவாக, தாமதமின்றி வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் தாமதங்களை தவிர்ப்பதற்கு அனைத்து சான்று வழங்கும் அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசும் அவ்வப்போது அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும் சாதிச்சான்றுகள் தாமதமின்றி விரைவாக வழங்குவதற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக்குறிப்பு

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதம் இருக்கும் நிகழ்ச்சி குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் என்னுடைய கவனத்திற்குக்கொண்டுவந்திருக்கிறார்கள் இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 10–50

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்து 7 தினங்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். 20 அம்சக் கோரிக்கைகளை அவர்கள் வைத்து, இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதேபோன்று தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களும், கடந்த 3 தினங்களாக, தமிழக அரசினுடைய பள்ளிகளில் பணியாற்றக்கூடிய அந்த ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய அடிப்படைச் சம்பளங்களை எங்களுக்கும் வழங்க வேண்டும் என்று சொல்லி, அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கைகளை பரிவோடு பரிசீலனை செய்து, இன்றைக்கு ஏற்பட்டு

1992 மார்ச் 26] [திரு. ஜி. பழனிசாமி]

திருக்கிற விலைவாசியையும் கணக்கிலே கொண்டு, அதே சமயத்தில், அவர்களுக்கு அமைக்கப்பட்ட அந்த சம்பளக் கமிஷனிலே கூட அவர்களுக்கு சரியாக நிவாரணம் கிடைக்கப்படவில்லை என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்— அமைச்சர் அவர்கள் அதை ஆராய்ந்து, அவர்களோடு பேசி, சுமூகத்தீர்வு காணவேண்டும் என்று சொல்லி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது அனுமதியோடு ஒரு விளக்கத்தை நான் தர விரும்புகிறேன். இன்றையதினம் ஆசிரியர்கள், பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்கள், கோரிக்கைகளை வைப்பதும், அதேபோன்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற நிகழ்ச்சிகளையும் பத்திரிகை வாயிலாகவும், நண்பர்கள் மூலமாகவும், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதுபற்றி ஒரு விளக்கத்தை இந்த அரசின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், முதலமைச்சராக இருந்தபோது, அந்த 10 ஆண்டுக்காலத்தில், கல்விக் கொள்கை என்ற அடிப்படையில், ஆசிரியர்களுடைய நலன்களை அரசு பார்த்துக்கொள்ளும், குழந்தைகளுடைய நலன்களை ஆசிரியர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில், ஆசிரியர்கள் சங்கங்களுடைய பிரச்சினைகளை முடிந்த அளவு அந்த 10 ஆண்டுக் காலத்தில் நாம் தீர்த்து வந்திருக்கிறோம். அதற்குப் பிறகு வந்த தி.மு.க. ஆட்சியில் ஆசிரியர்கள் கோரிக்கை வைத்தார்களா அல்லது இதுபோன்ற போராட்டங்களிலே ஈடுபட்டார்களா என்பதை எல்லாம் பார்க்கிறபோது, கேட்பதற்கே அச்சப்பட்டுக் கொண்டிருந்த நிலைமையைத்தான், அந்த 2 ஆண்டுக் காலத்தில் நாம் பார்த்து இருக்கிறோம். குறிப்பாக ஒரு பிரச்சினையை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல்கலைக்கழக மானியக் குழு, கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தந்தது. அதை ஏற்றுக்கொண்ட அன்றைய தி.மு.க. அரசு அந்தச் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாகத் தரவில்லை. அது மட்டுமல்ல, அப்படி உயர்த்தித் தந்த அந்தச் சம்பளத்தில் பெரும் பகுதி மத்திய அரசே தந்தது. மத்திய அரசு தந்த அந்தப் பணத்தை ஆசிரியர்களுக்குத் தராமல், வேறு வகையான செலவை அவர்கள் செய்துவிட்டார்கள். ஆனால் சம்பளம் வழங்கியதாக ஆசிரியர்களிடத்திலே கையெழுத்தை வாங்கிக் கொண்டார்கள். ஆசிரியர்களும், சம்பளம் வாங்காமலே வருமான வரி கட்ட வேண்டிய ஒரு அவல நிலைமையை அன்றைக்கு நாம் பார்த்தோம். அப்படிப்பட்ட நிலைமையிலேகூட, ஆசிரியர்கள்

அதைப்பற்றி, எதிர்த்து பேசுவதற்குக்கூட அச்சப்பட்டுக் கொண்டோ அல்லது கேட்பதிலே பிரயோசனம் இல்லை என்றோ நினைத்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, மறுபடியும் நூற்றுக்கணக்கான கோரிக்கைகளை எங்கள் முன்னாலே வைத்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் பரிவோடு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன, ஆசிரியர்கள் போராடினாலும். போராடாவிட்டாலும். அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக ஒரு கட்டுப்பாடு எங்களுக்கு இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற நிதிநிலை பற்றாக்குறை காரணமாக, நிதி சம்பந்தமான கோரிக்கைகளை நாங்கள் இந்த நேரத்திலே நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறோம், நிதி சம்பந்தப்படாத பிரச்சினைகளைப் பரிவோடு பரிசீலித்து. தக்க நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக இந்த அரசு இருக்கிறது என்பதைத் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆசிரியர்கள்பால், மிகுந்த அனுதாபத்தோடு செயல்படுகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் (மேசையைத்தட்டும் ஒலி),

3, விதி 110இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை,

தமிழகத்தில் மின்வெட்டு நீக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவைக்கு ஓர் அறிவிப்பை வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள், அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஈடில்லா தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் மின்சாரம் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்த இந்த அரசு, பொறுப்பேற்ற நாள் முதல், மின் உற்பத்தியை அதிகரிப்பதில் முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். கடுமையான சூழ்நிலையின் இடையே இந்த அரசு பொறுப்பேற்றபோது, உயர் அழுத்த தொழிற்சாலைகளின் மின் உபயோகத்தில் 25 விழுக்காடு மின்வெட்டும், மின் சுமையில், அதாவது மேக்சிமம் டிமாண்டில் 30 விழுக்காடு மின்வெட்டும், அமுலில் இருந்து வந்தது, இதனால், தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறன் வெகுவாக பாதிக்கப்பட்டதோடு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலையும் கணிசமாக அதிகரித்தது,